**<u>பெயர்– துரைசாமி</u>**

**<u>தந்தை பெயர்– சுப்ரமணி</u>**

**<u>நாள்–06.02.2024</u>**

**<u>அசல் வழக்கு எண்–143/2017</u>**

**<u>பி.வா.சா.1 குறுக்கு விசாரணை :</u>**

எனக்கு தமிழ் எழுத்துக்கூட்டி படிக்க தெரியாது. எனது வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ள சத்திய பிரமாண வாக்குமூலத்தில் என்ன விவரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்பது எனக்கு தற்போது நினைவில்லை. தாவா சொத்து எனக்கு முன்பாக 1994–ல் வாதி கிரயம் பெற்றுவிட்டார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. வழக்கின் விவரங்கள் என்ன என்று எனக்கு தெரியும். தாவா சொத்தை வாதி கிரயம் பெற்ற நாளிலிருந்து அவர் தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தை 1997–ம் வருடம் கிரயம் வாங்கினேன். தாவா சொத்திற்கான வரியை தற்போது வரை வாதி தான் கிரயம் பெற்றதிலிருந்து செலுத்தி வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. நான் 1997–ம் வருடம் கிரயம் வாங்கியதிலிருந்து தாவா சொத்திற்கு வரி செலுத்தி வருகிறேனா என்றால் இல்லை. வாதி தாவா சொத்திற்கான வரியை செலுத்தி வந்ததால் தான் என்னால் வரி செலுத்த இயலவில்லை என்றால் நான் வரி செலுத்தவில்லை. வாதி கிரையம் பெற்ற நாளிலிருந்து பட்டா அவர் பெயரில் தான் தாக்கலாகி வருகிறது என்றால் சரியல்ல. நான் காஞ்சிபுரம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.146/2017 வழக்கை பட்டா என் பெயருக்கு கேட்டு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரிதான். என் பெயரில் பட்டா இல்லாததால் தான் அந்த வழக்கை நான் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. என் பெயரில் உள்ள கிரய ஆவணங்கள் சரியில்லாததால் தான் வருவாய் துறையினர் என் பெயருக்கு பட்டா கொடுக்காமல் வாதி பெயரிலேயே பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி கிரயம் பெற்ற நாளிலிருந்து தாவா சொத்தை அவர் தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. நான் தான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறேன் என்பதை காட்டுவதற்கு ஏதாவது ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

ஒப்பம்/–(R.ராஜேஸ்வரி,B.Com.,L.L.M.,)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காஞ்சிபுரம்.